IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**CC.59/2024 Date : 20.01.2026 P.W. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விக்னேஷ் | ஆதார் எண் | |
| த/ பெயர்; | ரத்தினகுமார் | தொழில் | உளுந்தூர்பேட்டை SBI வங்கி கிளை மேலாளர் |
| கிராமம் | காட்டுமன்னார் கோவில் | வயது | 31 |
| புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**புகார்தாரர் தரப்பு சாட்சியின் முதல் விசாரணை**

1. நான் உளுந்தூர்பேட்டை SBI வங்கி கிளை மேலாளர் பணி செய்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மனின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எங்களது வங்கியில் வங்கி கணக்கு எண். 20169462283 என்பது எதிரி இந்திரஜித் என்பவர் பெயரில் உள்ளது . ம.சா.ஆ.1 காசோலை எங்களது வங்கியால் வழங்கப்பட்டது .

2. காசோலை எண். 207357 ஆனது 19.03.2024 தேதியிட்ட காசோலை எங்கள் வங்கிக்கு உளுந்தூர்பேட்டை இந்தியன் வங்கி மூலமாக வசூலுக்கு 25.03.2024 ம் தேதி வந்த போது எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்று எங்கள் வங்கியால் திருப்பப்பட்டது . காசோலை திருப்பப்பட்டதற்கான அபாரத தொகை எதிரியின் வங்கி கணக்கில் பிடிக்கப்பட்டது .

3. எங்களது வங்கியில் வங்கி சேமிப்பு கணக்கு எண். 20169462283 என்பது எதிரி இந்திரஜித் என்பவரால் பராமரிக்கப்பட்டு வருகிறது . அதற்கான வங்கி கணக்கு எண். 20169462283 எண்ணின் **Statement of account என்பது ம.சா.ஆ-6** ஆகும். ம.சா.ஆ. 6 ன் படி வங்கி கணக்கினை இந்திரஜித் என்பவர் நேரடியாக பராமரித்து வருகிறார் .

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

V GOMATHI
Digitally signed by V GOMATHI
Date: 2026.01.23 00:37:08 +0600

Judicial Magistrate -I
Ulundurpet.

typed E.Veeramani